7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் பிரகரம், ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்தல்	இணக்கமற்றது	கொரோனா தொற்றுநோய் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடத்தப்படவில்லை (கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் சுற்றறிக்கைகளின் பிரகாரம்)	
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/2017 இன் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது.		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது.		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல 05/2016 இன்படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது.		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது.		
8.5	நி.பி. 772 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது.		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமற்றது	27.04.2021 அன்று இத் திணைக்களத்தில் நடைபெற்ற கணக்காய்வு குழுவின் போது, வாகனங்களின் நிலை குறித்து விவாதிக்கப்பட்டு, பழுதுபார்ப்பு பயனற்ற வாகனத்தை (KH 5690) சரிசெய்து அகற்றப்படுத்தவும் பழுதுபார்ப்பின் ஊடாக கடமைகளைச் செய்ய பயன்படுத்தக்கூடிய வாகனமும் (KH 5694) பழுதுபார்ப்பு செய்யப்பட்டுள்ளது.	
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது.		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	இணக்கமானது.		
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது.		

9.6	குத்தகை வாகனங்களின் உரித்துபதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படுதல்	இணக்கமானது.		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது.		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது.		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது.		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது.		
11.2	நி.பி. 94(1) இன்படி, ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருத்தல்.	இணக்கமானது.		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	**எல்லைகளுக்கு இணங்குதல்**	இணக்கமானது.		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது.		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது.		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கமற்றது	அமைச்சரவை முடிவுகளின்பிரகாரம்காணி அமைச்சின் நான்காவது தளத்தின் நிர்மாணிப்புக்காக அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.	
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல்	இணக்கமானது.		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்த்தல்	இணக்கமானது.		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைகால வழங்கல்	இணக்கமானது.		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்தல்	இணக்கமானது.		

15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட	இணக்கமான		

	வருமானத்தை திரும்பிச் செலுத்திருத்தல்	து.		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்படல்	இணக்கமான து.		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமான து.		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமான து.		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமான து.		
16.3	20.09.2017 தேதியிட்ட MSD சுற்றறிக்கை இல 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல்	இணக்கமான து.		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமான து.		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வளைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	இணக்கமான து.		
17.3	தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளின் பிரகாரம் ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமான து.		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2008 மற்றும் 05/2018(1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணக்கமற்றது		எதிர்காலத்தில் தயார் செய்யபதிவு செய்யப்பட்டுள்ளது .
18.2	சுற்றறிக்கையின் அத்தியாயம் 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்தல்			
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது சுற்றறிக்கை இல 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமற்ற து	இந்த திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக சரியான அறிவு இல்லாததால், இந்த பிரச்சனைகளை அரச நிர்வாக அமைச்சுடன் பேசி தீர்க்க வேண்டுயமை.	2022 மார்ச் இறுதிக்குள் நிறைவு செய்தல்
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்தல்	இணக்கமற்ற து	கடந்த ஆண்டில்இடம்பெற்ற கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் பயிற்சி வாய்ப்புகளுக்கான வாய்ப்பு குறைந்திருத்தல்	இந்த ஆண்டில் பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்

19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்படல்	இணக்கமற்றது	2021 ஆம் ஆண்டிற்கான மனித வளத் திட்டத்தைத் தயாரித்து முடிக்கத் தவறியமை	2022 மார்ச் இறுதிக்குள் நிறைவு செய்தல்
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் விருத்தி மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது.		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	இணக்கமானது.		

PAL/A/LCG/2/2021/11 2021 ஆகஸ்ட் மாதம் 18 ஆந் திகதி

கணக்கீட்டு உத்தியோகத்தர்
காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2021 (நிதியாண்டு) டிசம்பர் 31 இல்முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

1. நிதி அறிக்கைகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின்2021 (நிதியாண்டு) டிசம்பர் 31 இல்உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல்கூற்றுடன் கூடிய 2021 (நிதியாண்டு) டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின்இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2021டிசம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின்நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல்கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனதுஅபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில்குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது கருத்துக்களைஅபிப்பிராயத்திற்கு உட்படுத்துபடுகின்றது. இலங்கை

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், நிதிக்கூற்றுக்கள் பிரிவுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் எனது பொறுப்பு மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக, கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல்கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்பு ாக உரியவகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் 1

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின்பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினைவிட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்ஒட்டுமொத்தமாக சமர்ப்பிப்பு மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கண ரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவிற்கு அமைவாக பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்

2

(அ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் முந்தைய ஆண்டோடு இணங்குகின்றன.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட முந்தைய ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் குறித்து எனது பரிந்துரைகள் செயல்படுத்தப் பட்டிருந்தது.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1. நிதி நிலமை மீதானகூற்றுக்கள்

1.6.1.1 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில், (ACA -06) இல் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் ஆகிய சொத்துக்களில் ஆரம்ப நிலுவைகள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் (ACA -06) இறுதி நிலுவைகளுக்கு இடையில் ரூ.129,899 ரூபாவான வித்தியாசம் காணப்பட்டுள்ளதுடன் அந்த வித்தியாசத்திற்கு காரணங்களை கணக்கு குறிப்பீடு மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிகயன்று தயாரிக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில், (ACA -06) இல் திணைக்களத்திற்குரிய செலவு ரூ.129,715,000 பெறுமதியான 19 வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்திற்குரிய ரத்மல்வெவ கமநலசேவை நிலையம் பயன்படுத்துகின்றடிராக்டர் மற்றும் லுனுகம்வெஹர பிரதேச செயலகத்தில் நிறுத்தப்பட்டுள்ள நீர் பவுஸர் ஆகியவற்றின் பெறுமதி மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிகயன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில், (ACA -06) இல்உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1.7 **கணக்காய்விற்கான சாட்சிகளை இல்லாமை**

மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர்31ஆம் திகதிகயன்று தயாரிக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில், (ACA -06) இல் உள்ளடக்கப்பட்டிருந்த செலவு ரூ.18,507,000 பெறுமதியான 6 வாகனங்கள் பயன்படுத்தப்படும் அல்லது இடம், பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் பொருட்கள் மீளாய்வு அறிக்கைகளை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

குட(அ) பிரதேசத்தின் மூல குத்தவகாணி ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு இடையிலான சேகரிக்கப்படுவதுடன்விவசாய குடியேற்ற பிரதேசத்திலிருந்து குத்தகை வருமானம் சேகரிக்கப்படுவதுடன், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதியில் காணப்பட்ட ரூ.84,916,237 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டருக்கவில்லை

மேற்கொள்ளப்பட்டருக்கவிமேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.நிலுவை வருமானத்தில் நூற்றுக்கு 53 அல்லது ரூ.45,145,773 ஆன இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாக காணப்பட்டிருந்ததுடன், நாயகத்தினால் அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் கமதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் மாகாணங்களுக்குநிலுவை வருமானத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த்தொகை ரூ.5,181,448 ஆக காணப்பட்டது. இடையிலான விவசாய குடியேற்ற பிரதேசத்தின் மூலம் குத்தகை வருமானம் சேகரிக்கப்படுவதுடன்

(ஆ) திணைக்களத்தினால் குத்தகை அறவிடுப்படும் காணிகளுக்குரிய குத்தகை பேரேடு பேணப்படாமையினால்,மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நிதி செயலாற்றுகை கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூ.105,312,901 ஆன காணி மற்றும் ஏனைய குத்தகை வாடகை வருமானம் மற்றும் 100 ரூபா மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சரி பார்க்க முடியவில்லை.

(இ) தெபரவெவ, மஹியங்கனை, மொணராகலை மற்றும் அம்பாறை ஆகிய மாகாணங்களுக்கு இடையிலான 4 அலுவலகங்களில் மட்டும் 2020 மற்றும் அதற்கு முன்னரான வருடங்களுக்குரிய ரூ.20,676,543ஆன விடப்பட்ட காணி குத்தகை வருமானமொன்றை மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய முந்தைய ஆண் 3 ரஞ்சிய காணி குத்தகை தொடர்பாக உரிய வகையில் அறிக்கைகளை (ப்பதை உறுதிப்படுவதுடன் முழுமையான குத்தகை பேரேடொன்றை சமர்ப்பிக்கப்படாத காரணமாக ஏ.சி.ஏ. 1(i)படிவத்தின் மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர்31ஆம் திகதிகயன்று

அறிக்கையிடப்பட்டிருந்த ரூ.84,916,237 நிலுவை குத்தகை வருமானத்தின்சரி பார்க்க முடியவில்லை.

2.2 செலவின முகாமைத்துவம்

மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் மூலதன செலவில் 07 இற்காக ரூ.140,000,000 ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அது கடந்த வருடத்திற்கு இணையாகநூற்றுக்கு 305 இல் அதிகரிப்பாகும். செலவுவிடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூ.2,000,000 தொகை முழுமையாக செலவிடப்படாதிருப்பதுடன், எஞ்சிய செலவு விடயங்களுக்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31ஆம் திகதியாகும்போது செலவிடப்பட்டிருந்த முழுத் தொகை ரூ.42,555,588 ரூபாவாக காணப்பட்டது. அதற்கமைய ஏற்பாடுகளிலிருந்து நூற்றுக்கு 70 அல்லது ரூ.97,444,412 தொகையைமதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தின் இறுதியிலும் காணப்பட்டது.

2.3 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இனங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்	**இணங்காமை**
(அ)	இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை	
(i)	xxivஅத்தியாயம் 4.2.5 பிரிவு	மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஒய்வு பெற்ற 08 உத்தியோகத்தர்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.911,533 ஆன கடன் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த 16 வருடத்திற்கு முன்னர் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.19,940 தொகை மற்றும் வருடம் 1 இற்கும் 2 இற்கும் இடையிலானகாலத்திற்கு முன்பு ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.188,695 ஆன மீதி தொடர்பில் தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒய்வுதியத்திலிருந்து அல்லது பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டிய இருந்தபோதிலும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ii)	xxivஅத்தியாயம் 4.5 மற்றும் பிரிவு 4.6	5 வருடத்திற்குமேற்பட்ட காலத்திலிருந்து வரும் ரூ.317,735 கடன் மீதி 05 உட்பட வேலை இடைநிறுத்தப்பட்ட 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.467,229 ஆன கடன் மீதி தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளைமுடிவடைந்து ஒழங்காற்று கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் பிணைப்பாளரிடமிருந்து அல்லது உரிமையாளரிடமிருந்து கடன் அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின்நிதி (4 விதிகள்	
	நி.ஒ.104 (3) மற்றும் (4)	நட்டஈடு அல்லது இழப்பீடு ஏற்பட்டபோது முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் கால தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்குமாயின்ஆரம்ப அறிக்கையை உடனடியாக அனுப்பி வேண்டிருப்பினும், 2019 மற்றும் 2020 ஆகிய வருடங்களில் 05

		வாகனங்களுக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கையை முன்வைப்பதற்கு 18 நாட்களுக்கும் 04 மாதங்களுக்கும் இடையிலான காலம் கடந்துள்ளதுடன் அதற்குரிய முழுமையான அறிக்கையை 2022 மார்ச் மாதம் 31 ஆனபோதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
	நி.ஒ. 371 (2)	நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் குறிப்பிட்ட பணிகளுக்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூ.100,000 ஆன ஆகக்கூடிய நிலை வரை தற்செயல் இடைகால கட்டுநிதி பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்டவருடத்தில் பெப்ரவரி 15 ஆம் திகதி பதவிநிலை உத்தியோகத்தருக்கு ரூ.143,500 தற்செயல் இடைகால கட்டுநிதி வழங்கப்பட்டிருப்பதுடன் உண்மையான செலவு ரூ.92,765 ஆக இருந்தது.
	நி.ஒ. 371 (5)	கட்டுநிதி தீர்ப்பதற்கு அந்த கட்டுநிதி வெளியிடப்பட்ட நிதி ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மேல் தாமதம் ஏற்படாதிருக்க வேண்டி இருப்பதுடன், துணை கட்டுநிதி வெளியிடப்பட்டதன் பின்னர் தொடர்புப்பட்ட பணியை நிறைவு செயது 10 நாட்களில் அந்த துணை கட்டுநிதி தீர்க்க வேண்டிருப்பினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் சந்தர்ப்பங்கள் 11 இல் வழங்கப்பட்டிருந்த மாத்தம் ரூ.166,364 தொகையான முற்பணம் ப்பதற்கு 24 நாட்கள் முதல் 04 மாதங்கள் வரையான கால வீச்சு இருந்தது.
(இ)	அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகள்	
(i)	2016 டிசம்பர் 29 ஆம் திகதி 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	எல்லா எரிபொருள் பரிசோதனைக்கு பின்னர் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஒட்டப்பின்னர் அல்லது என்ஜின் சம்பந்தமான பிரதான பழுதுபார்ப்புக்கு பின்னர் ஆகியவற்றில் முன்பு இருக்கும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டிருப்பினும், திணைக்களங்களுக்குரிய 30 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ii)	2018 ஜன்வரி 24 ஆம் திகதி 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவம்	சுற்றறிக்கையின் இணைப்பு 02 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக்கொண்டு திணைக்களத்தின் மனித வள திட்டம் தயாரிக்கப்பட வேண்டிருப்பினும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(iii)	2018 ஜன்வரி 24 ஆம் திகதி 05/2018 (1) ஆம் இலக்க	சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் பிரசைகள்

	சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதி 05/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை	பட்டயம்/பிரசைகள்வாடிக்கையாளர்சாசனத்தினை தயாரித்து நடைமுறைபடுத்த வேண்டிருப்பினும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	அரச கணக்கீடு சுற்றறிக்கை	
	2017 டிசம்பர் 29 ஆம் திகதி 262/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 4	2018 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு பின்னர் இறந்த மற்றும் ஒய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி, சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருப்பினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில்இறந்த உத்தியோகத்தரிடமிருந்து மற்றும் 08 ஒய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஒழுங்காக ரூ.232,267 மற்றும் ரூ.911,533 ரூபாவான தொகையை மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில்டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்ட அரச
	6	த்தியோகத்தருக்கு முற்பணக் கணக்கில் ள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
(உ)	2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 41 இன் பிரகாரம் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளைகளில் 6 ஆம் கட்டளை	RTI 03 படிவத்திற்கமைய தகவல் விண்ணப்ப ஆவணமொன்றை பேணிச் செல்ல வேண்டிருப்பினும் திணைக்களம் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.4 **<u>வைப்புக்கள்</u>**

பொது வைப்பு கணக்குகள் 03 இற்குரிய மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூ.68,794,932 மீதியில் உள்ளடக்கப்பட்ட 02 வருடங்களை தாண்டிய ரூ.1,138,699 வைப்புக்கள் தொடர்பாக ஒ.வி.571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3 <u>தொழிற்பாட்டு செயற்பாடு</u>

3.1 <u>செயலாற்றுகை</u>

3.1.1 **<u>எதிர்பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை</u>**

(அ) அரச காணி முகாமைத்துவ பணிகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக அரச காணி தகவல்கள் முகாமைத்துவ முறைமையை (e – Slims) 2013 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டு இறுதியில் அதற்காக ஏற்கப்பட்டுள்ள செலவு ரூ.159,456,247 ஆக இருந்தது. 07 வருடத்திற்குமேலதிகமாக இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பினும், குறிப்பிட்ட தகவல் முறைமைக்கு தகவல் உள்ளடக்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 1,306,917 ஆக இருந்துடன்மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தரவு முறைமைக்கு உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 100,000 இல் 62,785 மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தது. இத் கருத்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட வேண்டிய காணித்துண்டுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக எடுக்கும் காலம் தொடர்பாக மதிப்பிடப்படாததாக மேலும் அவதானிக்கின்றது.

(ஆ) அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமான சேகரிப்பு 09 மாகாண காணி ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் 08 பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன்மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் காணப்பட்ட எஞ்சிய காணி குத்தகை

வருமானம் தொடர்பாக தகவல்களை (e –Slims) முறைமையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டிருப்பினும் குறித்த தகவல்களை அந்த முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

(இ) மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் அரச காணி தகவல்கள் முகாமைத்துவ முறைமையை (e – Slims) மூலம் காணி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் புதிதாக 10,000 அளிப்புப் பத்தரங்களை வழங்குதல், 2000 உரிமப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் 500 நீண்டகால குத்தகைப் பத்திரங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும்போது அளிப்புப் பத்திரம், உரிமப்பத்திரம் மற்றும் குத்தகைப் பத்திரங்களின் எண்ணிக்க 7414 ஆகவும் 484 ஆகவும் 75 ஆகவும் இருந்தது.

(ஈ) காணி அமைச்சின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் அரச காணிகள் தொடர்பாக தகவல்களை சேகரிக்கும் நடளாவிய தொகை மதிப்பொன்று 2020 வருடத்தின் இறுதி காலாண்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 10 மில்லியன் தொகை மதிப்பு படிவங்களை அரச அச்சுத் திணைக்களத்தினால் இலவசமாக அச்சிடப்பட்டு நாடுமுழுவதும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் வழங்கப்பட்டிருந்த்து. குறித்த தொகை மதிப்பு நடவடிக்கைகளில் முன்னேற்றத்தினைமதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி ஆனதும் பெற்றுக்கொள்ளாமை காரணமாக இந்த தொகை மதிப்பில் இனங்காணப்பட்ட அரச காணிகள் தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட முடியவில்லை.

(உ) பிம்சவிய கருத்திட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் காணிக் கச்சேரிகளை நடாத்துதல், உரிமப் பத்திரங்களை வழங்குதல், அளிப்புப் பத்திரங்களை வழங்குதல், நடமாடும் சேவை நடாத்துதல், பிரிவு நாட்களை நடாத்துதல் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை காணல் ஆகியவை திட்டமிடப்பட்டிருந்ததுடன், காணிக் கச்சேரிகளை நடாத்துவதை தவிர்ந்த மற்றைய பணிகளின் முன்னேற்றத்தினை நூற்றுக்கு 4 ம் 43 ம் கீழான வீச்சில் இருந்தது.

(ஊ) பிம்சவிய நிகழ்ச்சிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 68 பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணிக் கச்சேரிகளை 20 நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 177 காணிக் கச்சேரிகளை நடாத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அநுராதபுர மாவட்டத்தில் ராஜாங்கனய பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் நடாத்தப்பட்டிருந்த காணிக் கச்சேரிகளின் எண்ணிக்கை 92 ஆவதுடன், அது வருடாந்த இலக்கத்திற்கு மேலதிகமான பெறுமதியை கொண்டுள்ளது. அதன் பிரகாரம் நடத்தப்பட முடியுமான சிறந்த காணி கச்சேரிகளின் எண்ணிக்கை தொடர்பாக அவதானத்தை செலுத்தாமல் மிகவும் கீழான இலக்கிலிருந்து திட்டமிடப்பட்டுள்ளதாக அவதானிக்கின்றது.

3.1.2 **<u>வருடாந்த செயலாற்றுகை அறிக்கை</u>**

2020 ஆம் வருடம் வரை தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையின் மூலம் திணைக்களத்தின் நிலுவை வருமானத்தினை அறவிடுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அரச காணிகளில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் ஆகிய உபாய முறைகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையில் குறித்த இலக்கு மற்றும் முன்னேற்றம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலுவையான வருமானத்தை அறவிடுதல், அனுமதியின்றி கையகப்படுத்தல் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டரீதியான நடவடிக்கைகளில் முன்னேற்றம் பரிசோதிக்கப்படமுடியவில்லை.

3.2 **<u>பெறுகைகள்</u>**

(அ) திணைக்களத்தினால் மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் 400 கணனி மேசைகள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 21/1596/134 ஆம் இலக்க 2021 ஆகஸ்ட் மாதம் 30 ஆந் திகதி நடாத்திய அமைச்சரவையின் தீரமானத்தின்படி கொள்வனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவை செயலாளரால் அறவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகை நடவடிக்கையில் காணப்பட்ட தாமதம் காரணமாக திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாதிருப்பதுடன் மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் ஆகஸ்ட் 18 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட ரூ.79,218 தொகை வீண் செலவாக காணப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில்(e – Slims) கருத்திட்டத்தின் மூலம் தொழிநுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 55.92 ரூபா மில்லியன் ஒதுக்கீடுகளை மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி அன்று பெறுகை நடவடிக்கையில் காணப்பட்ட தாமத[illegible]யன்படுத்துவதற்காக தவறிருந்தது.

3.3 <u>ஆதன முகாமைத்துவம்</u>

(அ) 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த பெறுமதி ரூ.221,065 ஆன டெப் இயந்திரம் 01 உம், 40அங்குலம்LED தொலைக்காட்சி இயந்திரம் 01 உம், எண்ணிக்கையிலான பல்வேறு ஊடக ப்ரஜெக்டர் ஒன்றை 2022 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஆனதும் பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்குரிய 05 வாகனங்களை 4 வருடமும் 7 வருடமும் இடையிலான காலத்திலிருந்து திணைக்கள வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 நட்டங்களும் இழப்பீடுகளும்

(அ) மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில்டிசம்பர் 31 ஆம் திகதி நடந்த 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக மொத்தம் ரூ.1,988,262 ஆன நட்டத்தில் ரூ.1,079,050 ஆன தொகையை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களில் பதிவு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில்டிசம்பர் 23 ஆம் திகதி இலக்கம் PD – 6509 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்தினை நிதிக் கூற்றில் நட்டம் மற்றும் விட்டுவிடுதல்கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டும் 2019 ஆம் ஆண்டும் இடையிலான காலப் பகுதியில் விபத்துக்களினால் ஏற்பட்ட மொத்தம் ரூ.2,399,395 தொகையான இழப்பீட்டுக்காக காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து ரூ.1,592,872 வும், பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளிடமிருந்து ரூ.54,887 வும் அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியான ரூ.700,813 தொகையான இழப்பீடு தொடர்பில் ஒ.வி.109 இன் பிரகாரம் நீக்குவதற்கான கட்டளை பெற்றுக்கொள்வதற்கு மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் இறுதி ஆனபோதிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

அரசாங்க காணிகளை முகாமை செய்யும் நடவடிக்கைகளில் ஒணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச நிறுவனமான ஜனாதிபதி செயலகம், பிரதேச செயலகம், சுற்றாடல் அதிகாரசபை, விலைமதிப்பு திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும் ஈ - அரச எண்ணக்கருவின்படி அரச காணி தொடர்பான தகவல் முகாமை முறைமையில் (e-Slims) பணிகளை மேற்கொள்வதற்கு லங்கா அரசாங்க வலைவமைப்பு கருத்திட்டம் (LGN 2.0) பயன்படுத்தப்படுவதாக காணி ஆணையாளர் நாயகத்தின் 1/21/LGN 2.0 ஆம்இலக்க 2018 பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மின்னஞ்சள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும், குறித்த நடவடிக்கைகளுக்காக லங்கா அரசாங்க வடிவமைப்பு கருத்திட்டத்தினை பயன்படுத்தாமை காரணமாக ஈ - அரச எண்ணக்கரு நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்களம் பங்குபற்றவில்லை என்பதை அவிதானிக்கப்பட்டது. மேலும், இணைத்தள வசதிகளை பெற்றுக்கொள்ளும் முகமாக தொடர்பாடல் இரண்டு கம்பனிகளுக்கு மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் ரூ.5,368, 856 தொகையான செலவு திணைக்களத்தினால் ஏற்கப்பட்டிருந்ததுடன் LGN 2.0 திணைக்களத்திற்கு இணையத்தள வசதிகளை வழங்கும் சார்பில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரால் ரூ.448,586 தொகையான செலவு மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் ஏற்கப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட காணி அமைச்சின் முன்னேற்ற அறிக்கையின்படி இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் சுமார் நூற்றுக்கு 20 ஆன அரச காணிகள் தொடர்பாக நேரடியான பொறுப்பு திணைக்களத்திற்கு கையளிக்கப்படுவதாக இனங்காணப்பட்டிருந்ததுடன் குறித்த காணிகளுக்குரிய, 1931 ஆம் ஆண்டில் திணைக்களம் தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காணி கையுதிர்த்தல் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட காணி ஆவணமொன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை.

(இ) KR-6496 ஆம் இலக்கமுடைய வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில் ஒ.வி.104 (4) இன் பிரகாரம் "நட்டஈட்டு தொடர்பாக இறுதி அறிக்கை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவில்" சிபாரிசின்படி அரசுக்கு ஏற்பட்ட ரூ.338,755 ஆன நட்டஈட்டில் நூற்றுக்கு 15 அல்லது ரூ.50,813 தொகை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் இறுதி 9 லும் குறித்த பணத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

4 **நிலையான அபிவிருத்தி**

மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் செயலாற்றுகை அறிக்கையின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலக்காக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல் வரை இருப்பினும், திணைக்களம் மற்றும் மாகாணச் சபையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் பங்களிப்பை மதிப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

5 பணிக்குழு முகாமைத்துவம்

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணிக்குழு தொடர்பாக தகவல்கள் பின்வருமாறு.

	அங்கரிக்கப்பட்ட	உண்மையான	வெற்றிடங்கள்
சிரேஷ்ட	53	35	18
மூன்றாம் மட்டம்	38	5	33
இரண்டாம் மட்டம்	678	488	190
ஆரம்ப மட்டம்	140	92	48
	909	620	289

மதிப்பாய்வு செய்யப்பட்டஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சிரேஷ்ட மட்டத்திலான 18 பதவிகள் உட்பட289 வெற்றிடங்கள் காணப்பட்டுள்ளதுடன் குறித்த பதவிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கோ அல்லது சேவை அவசியத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆர்.எம்.ரத்னாயக்க
பிரதி கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்தின் சார்பாக